*செய்தி வெளியீடு எண் :19* *நாள் :05.10.2019*

**தேனி மாவட்டம்**

**உள்ளாட்சித் தேர்தல்-2019-ஐ முன்னிட்டு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் டாக்டர்.ஆர்.பழனிசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் தேர்தல் பணி மேற்கொள்ளவுள்ள அலுவலர்களுடனான முன்னோடி ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

*****

உள்ளாட்சித் தேர்தல்-2019-ஐ முன்னிட்டு,தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (05.10.2019) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் டாக்டர்.ஆர்.பழனிசாமி,இ.ஆ.ப.,(ஓய்வு) அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தேர்தல் பணி மேற்கொள்ளவுள்ள அலுவலர்களுடனான முன்னோடி ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தெரிவித்ததாவது,

வாக்காளர்களின் நலன்கருதி, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மூலம், 04.10.2019ல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் இணையதள வழி (tnsec.nic.in) காண்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இணையதள முகவரி வாயிலாக வாக்காளர்கள் தங்களது வாக்காளர் அடையாள அட்டை எண் மூலம் தங்களது விபரங்கள் மற்றும் வாக்குச்சாவடிகளின் விபரங்கள் மற்றும் இதர விபரங்களை எளிதில் அறிந்துகொள்ளலாம். மேலும் எந்த ஒரு வாக்காளர்களும் விடுபடக்கூடாது என்ற அடிப்படையில் புதிய வாக்காளர்கள் சேர்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியலில் பெயர் திருத்தம், நீக்கல் போன்றவைகளை மேற்கொள்வதற்கு தற்சமயம் கூடுதலாக 10 தினங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அனைத்து வாக்குப்பதிவு மையங்களும் நிரந்தர கட்டிடம் / பாதுகாப்பான கட்டிடமாக இருப்பதை உறுதி செய்வதுடன், அனைத்து வாக்குப்பதிவு மையங்களிலும் அடிப்படை வசதிகள் (குடிநீர், மின்சாரம், கழிப்பறை மற்றும் சாய்வு தளம் ) இருப்பதையும் உறுதி செய்யவும்மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் இருப்பில் உள்ள வாக்குப்பெட்டிகளை சரிபார்த்து 100 சதவீதம் பயன்படுத்தும் வகையில் ஆயத்தமாக வைத்திருப்பதை சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்க்கொள்ளவும் மற்றும் உள்ளாட்சி தேர்தல்களுக்கு பயன்படுத்தக்கூடிய பாரங்கள், படிவங்கள், கையேடுகள் மற்றும் வாக்குப்பதிவு பொருட்கள் தேவைகளை உறுதி செய்வதுடன் நல்ல முறையில் பராமரித்து கடந்த பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தல் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் பணிகளை நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலிலும் சிறப்பாக மேற்கொள்ள அலுவலர்கள் முழு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தெரிவித்தார்.

*அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியரக உள்ளாட்சித் தேர்தல் பொருட்கள் வைப்பறையில் வைக்கப்பட்டுள்ள ஊராட்சி தலைவர் தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடிய கட்சி அடிப்படையில் அல்லாத வாக்குச்சீட்டுகள் மற்றும் கையேடுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையும், படிவங்களின் இருப்பினையும் இருப்புப்பதிவேடு மற்றும் தேனி, ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியங்கள், ஆண்டிபட்டி பேரூராட்சியில் உள்ள தேர்தல் பொருட்களின் வைப்பறையினையும், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கு பயன்படுத்தப்பட இருக்கும் வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பு வசதியினையும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.*

*இந்நிகழ்வின் போது, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆர்.பாலசந்தர்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல் - உள்ளாட்சி) ப.சங்கர நாராயணன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) நா.விஜயலட்சுமி, தேர்தல் நடத்தும் அலுவலர்களான வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர்கள், மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***